சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தரம் - 13** **கணக்கீடு — 33**

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 5

## தேர்ச்சி — 13 : நிதி விகிதங்கள் (தொடர்ச்சி)

வாரம் - 5 தயாரிப்பு : சஜித்.sp
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி BBA(Financial Spl), University of Colombo

**1.** முனாஸ் PLC யின் மூன்று ஆண்டுகளுக்கான தெரிவு செய்யப்பட்ட நிதிவிகிதங்கள் பின்வருமாறு உமக்கு தரப்படுகின்றது:

| விகிதங்கள் / ஆண்டுகள் | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|
| விற்பனையில் இலாபம் | 0.18 | 0.22 | 0.195 |
| திரவச் சொத்து : நடைமுறை பொறுப்பு | 0.95 : 1 | 1.02 : 1 | 1.12 : 1 |
| வட்டி உள்ளடக்கல் ( மடங்குகள் ) | 15 | 12 | 13.5 |
| உரிமை மீதான திரும்பல் | 20% | 23% | 25% |
| இருப்பு பேணும் காலம் ( மாதங்கள் ) | 3 | 5 | 4.5 |
| வருமதிகள் சுழற்சி ( தடவைகள் ) | 20 | 18 | 25 |
| பங்கொன்றுக்கான உழைப்பு ( ரூபா ) | 3.50 | 0.75 | 2.25 |
| கடன் விகிதம் | 0.5 | 0.65 | 0.7 |

**வேண்டப்படுவது :**
பின்வரும் ஒவ்வொரு நிலைமைக்குமான பொருத்தமான ஆண்டினை காரணத்துடன் குறிப்பிடுக.

- **(I)** குறுங்கால கடன்களை செலுத்துவதற்கான உயர்வான ஆற்றலை கொண்ட ஆண்டு
- **(II)** செலவு முகாமைத்துவம் தொடர்பான கட்டுப்பாட்டை இழந்த ஆண்டு
- **(III)** நீண்டகால கடன்களுக்கு உயர்ந்தளவிலான பாதுகாப்பை வழங்கிய ஆண்டு
- **(IV)** இருப்புக்களை விரைவாக விற்பனை செய்த ஆண்டு
- **(V)** குறைந்தளவிலான உரிமை மூலதனத்தினை கொண்ட ஆண்டு
- **(VI)** மதிப்பு குறைப்பு நட்டம் மற்றும் உத்தேச நட்டத்திற்கான படிகள் ஒதுக்கம் போன்றன குறைவாக ஏற்படக்கூடிய ஆண்டு
- **(VII)** பங்கொன்றுக்கு உயர்ந்த திரும்பலை வழங்கிய ஆண்டு
- **(VIII)** முதலீட்டாளருக்கு குறைந்தளவிலான வருவாயை வழங்கிய ஆண்டு

**2.** பின்வரும் தகவல்கள் வரையறுத்த ரேனுகா பொது கம்பனியின் 31.03.2022 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புடையதாகும்.

| | |
|---|---|
| ➢ சரக்குப்புரள்வு விகிதம் (தடவைகள்) | 6 |
| ➢ மொத்த விற்பனைப் பெறுமதி (ரூபா “000” களில்) | 6 000 |
| ➢ நடைமுறையல்லாச் சொத்துக்கள் (ரூபா “000” களில்) | 6 400 |
| ➢ நடைமுறையல்லாப் பொறுப்பு : நடைமுறைப் பொறுப்புக்கள் | 5 : 3 |
| ➢ 01.04.2021 இல் உள்ளப்படியான இருப்புக்கள் (ரூபா “000” களில்) | 500 |
| ➢ மொத்த செலவுகள் (ரூபா “000” களில்) | 400 |
| ➢ 31.03.2022 இல் நடைமுறையல்லாப் பொறுப்பு (ரூபா “000” களில்) | 1 000 |
| ➢ மொத்த இலாப வீதம் கொள்விலையில் | 25% |
| ➢ நடைமுறையல்லாச் சொத்துக்கள் : நடைமுறைச் சொத்துக்கள் | 4 : 1 |

| | |
|---|---|
| ➢ பங்கொன்றுக்கான உழைப்பு ரூபா | 10 |
| ➢ பங்கொன்றின் பிரதிபயன் ரூபா | 500 |
| ➢ பங்கொன்றுக்கான உழைப்பு – பங்கொன்றுக்கான இலாபம் (ரூபா) | 7 |

**வேண்டப்படுவது :**

**01.** 31.03.2022 இல் உள்ள நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி
**02.** 31.03.2022 இல் முடிந்த ஆண்டுக்கான மொத்த இலாபத்தின் பெறுமதி
**03.** நடைமுறை விகிதம்
**04.** 31.03.2022 இல் உள்ள வியாபார இருப்புக்களின் பெறுமதி
**05.** 31.03.2022 இல் காணப்பட்ட கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்
**06.** இலாப விகிதம்
**07.** உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்
**08.** பிரேரித்த பங்குஇலாபம் ரூ. 100 000 எனில், செலுத்திய பங்குஇலாபம் யாது?

**3.** 2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான **கோல்ட்** கம்பனியில் கணிக்கப்பட்ட நிதி விகதங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ✓ வட்டிக் காப்பு விகிதம் | 3 தடவைகள் |
| ✓ கடன் மூலதனத்திற்கும் உரிமைக்குமிடையிலான விகிதம் | 0.6 : 1 |
| ✓ கடன் சேகரிப்பு காலம் | 1.33 மாதம் |
| ✓ மொத்த சொத்து மீதான திரும்பல் விகிதம் | 0.16 : 1 |
| ✓ இலாப விகிதம் | 12% |

2022.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான **சில்வர்** கம்பனியின் தரவுகள் வருமாறு:

| | **ரூபா "பில்லியன்"** |
|---|---|
| ✓ நடைமுறைச் சொத்துக்கள் | 0.1 |
| ✓ மொத்தச் சொத்துக்கள் | 1.2 |
| ✓ 10% வங்கிக்கடன் | 0.6 |
| ✓ சராசரி வியாபார வருமதிகள் | 0.2 |
| ✓ மொத்த இலாபம் | 0.4 |
| ✓ செலவுகள் | 0.22 |

- சில்வர் கம்பனியினால் கணிக்கப்பட்ட மொத்தஇலாப வீதம் 25% ஆகும்.
- அனைத்து விற்பனைகளும் கடனுக்கே செய்யப்பட்டது.
- வருடத்தில் 360 வேலை நாட்கள் உள்ளதென கருதுக.
- வருமானவரியினை புறக்கணிக்க.

**வேண்டப்படுவது:**

**1.** **சில்வர்** கம்பனியின் பின்வரும் நிதிவிகிதங்களைக் கணிக்க.
**01.** இலாப விகிதம்
**02.** கடன் சேகரிப்பு காலம்
**03.** மொத்த சொத்து மீதான திரும்பல் விகிதம்
**04.** வட்டிக் காப்பு விகிதம்
**05.** கடன் மூலதனத்திற்கும் உரிமைக்குமிடையிலான விகிதம்

**2.** **கோல்ட், சில்வர்** கம்பனிகளின் நிதிவிகிதங்களின் அடிப்படையில் பின்வருவனவற்றை காரணங்களுடன் குறிப்பிடுக.
**01.** நீண்டகால கடன்களுக்கு உயர்ந்தளவிலான பாதுகாப்பை அளிக்கும் கம்பனி
**02.** அதிக திரவத்தன்மையினை உடைய கம்பனி
**03.** இலாபத்தன்மையில் சிறந்த நிலையை கொண்டுள்ள கம்பனி
**04.** ஆகக்கூடுதலான கடன்மூலதனத்தினை பயன்படுத்தும் கம்பனி
**05.** உத்தேச நட்டங்களுக்கு அதிக வாய்ப்பு உள்ள கம்பனி

Sajith.SP